
T/200/0411
0411

# ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து



INTERACT CLUB
OF
MAHAJANA COLLEGE
TELLIPPALAI

த. சண்முகசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
ஜெயம்

# மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

விஜயதசமி
~~நிறுவியவர் நினைவு~~ நாளும்

பரிசளிப்பு விழாவும்

~~1990 - 06 - 24~~ 91 - 12 - 17

பெயர் : செல்வி. த. சுகிர்தா

வகுப்பு : ஆண்டு 10  பரிசு : இரண்டாம்

போட்டி:- மாலைகட்டல்

பொறுப்பாசிரியர்
சைவ வளர்ச்சிக் கழகம்
மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை

வழங்கப்படுகிறது.

பரிசுக்குழுவின் சார்பில்  கொத்தணி அதிபர்

# ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து

★

த. சண்முகசுந்தரம்

★

வெளியீடு:

அருள் வெளியீட்டகம்,
மாவை கந்தசாமி கோயிலடி,
தெல்லிப்பழை,
இலங்கை.
30-05-84.

விலை ரூபா [redacted]/-

எல்லா உரிமையும் ஆக்கியோனுக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து" என்ற இக் கட்டுரைத் தொடர் 7-3-82 தொடக்கம் 'தினகரன் வார மஞ்சரி' ஏட்டில் வெளி வந்தது. இத்தொடர் வெளிவர வேண்டும் என என்னுடன் பேசிப் பெரிதும் ஊக்கப்படுத்தியவர் "தினகரன்" பிரதம ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன் இவருக்கு நான் பெரிதும் கடப்பாடுடையேன். என்னை என்றுமே ஊக்குவிப்பவர் இவர்.

இந்த நூலை அச்சிட்டுத்தந்த குரும்பசிட்டி அம்பிகா அச்சகத்திற்கு என் உளப்பூர்வமான நன்றி.

த. சண்முகசுந்தரம்

---

இந்த நூலின் முதற்பதிப்பு விற்பனை மூலம் கிடைக்கும் இலாபம் கீரிமலைச் சிவநெறிக் கழகத்திற்குச் சேரும்.
விற்பனை: திரு. ச. விநாயகரத்தினம், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

---

* * * * * *

# The Thoughts of Saiva Mystics of Ceylon

*By*

T. Sanmugasuntharam, B. A. (Cey.), Dip - in - Ed, (Cey

*Publishers*:
ARUL VELIETAKKAM,
Mavai Kanthasamy Kovilady,
TELLIPPALAI.
Sri Lanka.
*30-5-84*.

Price: Rs. **10**/=

*All Rights Reserved*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTERACT CLUB
OF
MAHAJANA COLLEGE
TELLIPPALAI

# ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து

## 1. மகான் செல்லப்பா

"அங்கே ஒரு நெருப்பு
இங்கே ஒரு நெருப்பு"

ஈழநாட்டிலே சித்தர் பரம்பரை ஒன்று வாழையடி வாழையாக இருந்துவருகின்றது. இது பற்றிச் செவி வழிவந்துள்ள கதைகள் பலவும் இருக்கின்றன. இவற்றை விளங்கியோ விளங்காமலோ பொது மக்கள் கூறிவருகின்றனர். அவற்றுள் சிலவற்றுக்குத் தெரிந்தவரையில் விளக்கம் தருவதே இந்த நூலின் நோக்கம்.

ஈழத்துச் சித்தர் பரம்பரையில் முக்கியமானவர் செல்லப்பாச் சாமியார். இவரே கொழும்புத்துறை குருமகான் சிவயோக சாமியின் குரு. செல்லப்பாச் சாமியாரை 'விசர்ச் செல்லப்பா' என்பர். இவருடைய போக்கும் கூற்றுகளும் புதுமையானவை. உலகியல் நோக்கில் நின்று இவற்றை விளக்க இயலாது. மெய்யறிவு நிலையில் இருந்து மட்டும் விளக்கலாம். மேலும் இவருடைய கூற்றுக்களில் வருகின்ற சொற்கள் யாவும் சாதாரண கருத்தை உணர்த்துபவை அல்ல. இது சித்தர் பரம்பரையின் போக்கு

"மகான் செல்லப்பா சித்தர் அல்லர். அவர் மெய் ஞானி; ஞானவான்" எனக் கொள்வாரும் உளர். "சித்தர்க்கு முத்தி இல்லை" என்பது ஒரு சாராரின் கருத்து. "சித்தர்கள் கடும் நோன்பு இருந்து அட்டமா சித்திகளைப் பெற்றவர்கள்; தாங்கள் பெற்ற தவத்தைச் சித்து விளையாடிச் செலவு செய்பவர்கள்" எனவும் இச் சாரார் வாதிடுவர். "உண்மையான ஞானியைச் சமாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தால், அந்த இடத்திலே சிவலிங்கம் தானுகவே தோன்றும். அப்படித் தோன்ருவிட்டால் அவர் ஞானி அல்லர்'' என்றும் இச்சாரரார் கருதுவர். எது எப்படி இருப்பினும், மகான் செல்லப்பா பற்றி எந்த விதமான பிரசாரமோ அல்லது புகழ் பாடுகின்ற முயற்சியோ இல்லை. இருந்தும் வாழையடி வாழையாக அவர் புகழ் வளர்ந்து வந்துள்ளது. அவரின் போதனைகளை அவரின் சீடர் பரம்பரை நன்கு பேணிவந்துள்ளது. தான் செய்த தவத்தைத் தான் சீடர் சிவயோகசாமியிடம் கையளித்துப் போனுர் என்பர். எதுஎவ்வாருக இருப்பினும், ஈழத்து மெய்யியல் வாழ்க்கையின் தனிக் கலங்கரை விளக்கமாகவே யோகர் சுவாமியார் திகழ்கின்ருர் என்பதில் அவரின் சீடர் பெருமையடைவர். இவர்களின் கூற்று, போதனை எல்லாம் உயர்ந்த படியில் நின்று செய்யப்பட்டவை. விசர்ச் செல்லப்பாவின் புகழ் பெற்ற நிகழ்ச்சி ஒன்றுக்கு விளக்கந் தரலாம். இதனை எனக்குக் கூறியவர் என் அருமைத் தந்தையார் ஆ. தம்புச் சட்டம்பியார். இவர் யோகர் சாமியின் இளமைத் தோழன். என் தந்தையார் எனக்குச் சொல்லியவற்றை அப்படியே இங்கு பதிந்துவைக்கின்றேன்.

''செல்லப்பா அடிகளார் ஒரு நாள் தவம் கலைந்து நல்லூர்க் கோயிலுக்கு வந்தார். அப்போது அவருக்குப் பசி எடுத்தது. தனக்கு விருப்பமான அடியார் ஒருவர் வீட்டிலே போய் உணவு கேட்டார். பிற்பகல் நான்கு மணி. அப்போது வீட்டில் உணவு இல்லை. அந்த அடியார் "சாமி உணவு முடிந்து விட்டது. இதோ காய்பிஞ்சு எல்லாம் இருக்கின்றன. என் மனைவி உடனே திருவமுது செய்விப்பார் தங்களை'' என்ருர். அப்போது அந்த அம்மையாருக்குக் காய்ச்சல். இதனைத் தன் அகக்கண்ணுல் உணர்ந்து விட்டார் அடிகளார்.

''நல்லது. அரிசி, காய்பிஞ்சை அப்படியே தா. நான் சமைப்பேன். உன் பத்தினிக்கு நாளை சுகம் வரும்'' என்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசி காய்பிஞ்சைப் பெற்ற செல்லப்பா அடிகளார் நேரே நல்லூர்க் கந்தன் கோயில் கிழக்கு வாசலுக்கு வந்தார். இரண்டு முறை ஒரு குடுவையில் அரிசியைக் கிள்ளிப் போட்டார். அடுப்பை நன்கு எரித்தார். அடுப்பு எரியும் போது காய்பிஞ்சுகளைப் பாகஞ் செய்தார். அவிசு வைப்பதே அடிகளார் நோக்கம். அடுப்பு நன்கு எரிந்து கொண்டிருந்தது. நெருப்புச் சுடர் நாலு பக்கமும் வீசியது.

அவிசு எரிந்து போகாமல், அடுப்பைச் சற்றுத் தணித்து விட்டார். நல்ல மணம் குடுவையிலிருந்து வந்தது. பசி மேலீட்டினால் அவரின் வாயிலிருந்து உமிழ்நீர் சுரந்தது. அது கடை வாய்ப் பக்கத்தால் வழிந்தது. அடிகளாருக்கு இது பிடிக்கவில்லை. தன்மீது அவருக்குக் கோபம் வந்து விட்டது. உடனே "ஏய் வயிறு. நீ என்ன செய்கிறாய்? இந்தக் கட்டையை இப்படி ஆட்டலாமா? வயிற்றுப்பசி முருக தாகத்தை இல்லாமற் செய்து விட்டதே" எனப் புலம்பினார். பின்னர் குடுவையைப் பார்த்தார். "ஏய் குடுவை! நீ எனக்கு இன்று நல்லபாடம் படிப்பித்தாய்" என்றார். சிறிது வேளை தியானத்தில் ஆழ்ந்தார்; புலம்பினார்; அழுதார்; தனக்குள்தானே பேசினார். புலன் அடங்கவில்லை என்றகவலை.

"அங்கே ஒரு நெருப்பு
இங்கே ஒரு நெருப்பு"

என்றார். மீண்டும் மௌனம் நிலவியது.

"அங்கே குடுவை கொதிக்கிறது. இங்கே குடுவை கொதிக்கின்றது" என்று கூறினார்; விறகுக் கட்டையை எடுத்துக் குடுவையை உடைத்தார். மீண்டும் மௌனமாக இருந்தார். இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டு நின்றார் சிலர்.

"பார், விசர்ச் செல்லப்பாவின் கூத்தை. பசி என்று மனிதன் சமைத்தது, பின்னர் விறகுக்கட்டையால் பானையை உடைத்துவிட்டது. அவிசு அடுப்பிலே அப்படியே சிந்திக் கிடக்கின்றது. இந்தப் பைத்தியத்துக்குத்தான், தருமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சை போடுவது பிழை'' என்றனர். இவை அடிகளார் காதிலேபட்டனவோ என்னவோ தெரியாது. அவர் மீண்டும் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார்.

நல்லது அடிகளார் கூறியவற்றை இங்கு ஆராயலாம்.

''அங்கே ஒரு நெருப்பு, இங்கே ஒரு நெருப்பு''

அங்கே ஒரு நெருப்பு என்பது அடுப்பிலே எரிகின்ற நெருப்பு. இங்கே ஒரு நெருப்பு என்பது வயிற்றுப்பசி. இது கொள்ளிப் பசி. உதராக்கினி என்பர் வட மொழியாளர். அதாவது வயிற்று நெருப்பு என்பது பொருள்.

''அங்கே குடுவை கொதிக்கின்றது.
இங்கே குடுவை கொதிக்கின்றது''

அடுப்பிலே இருந்து கொண்டு குடுவை கொதிக்கின்றது இங்கே வயிறு என்கிற குடுவை கொதிக்கின்றது என்பது பொருள். அந்தக் குடுவை கொதித்தால் உணவு கிடைக்கும். இந்தக் குடுவை கொதித்தால் என்ன பயன்? சிவத்தியானமே இல்லாது போய்விடும். இதுதான் செல்லப்பா அடிகளாரின் ஏக்கம். அந்த ஏக்கத்தினுல் அவர் மீண்டும் தியானத்தில் ஆழ்ந்து விடுவார்.

இது இப்படி இருக்க, அடிகளாரது சீடருடைய மனைவியின் காய்ச்சல் உடனே நின்று விட்டது. உடலைச் சுத்தம் செய்த அந்த அம்மையார் ஏதோ ஓர் எண்ணத்தினுல் உந்தப்பட்டார். உடனே பிட்டு அவித்து அரையலும் தயாரித்தார். சுத்தமான பெட்டியில் பிட்டையும் அரையலையும் கணவனும் மனைவியும் எடுத்துச் சென்றனர் தங்கள் குருவிடம். இவர்களைக் காணுமற்கண்ட அடிகளார் கண்ணைத் திறந்தார். பிட்டை வாங்கி அன்புடன் உண்ணத் தொடங்கினுர். அவிந்த அடுப்பையும் உடைந்த குடுவையையும் பார்த்த அந்தச் சீடர் எதுவும் பேசவில்லை. குருபக்தி அப்படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய், என்ன பார்க்கிருய்? குடுவை உடைந்து போய் விட்டது உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? செல்லப்பாவின் போக்கு இப்படித்தான் என்று நினைக்கிருய்'' என்ருர் அடிகளார்.

சாப்பாடும் முடிந்து விட்டது. எழுந்துபோய் அடிக ளார் கிணற்றிலே வாயைக் கழுவினுர். மீண்டும் அமைதி நிலவியது. அடிகளார் பேசினுர்.

''அந்தப்பானையும் உடையும்;இந்தப்பானையும் உடையும்' என்ருர்; தொடர்ந்து பேசினுர்.

''மகனே கேள். அது மண்ணுல் செய்தபானை. இந்த உடம்பான பானையும் ஒருநாள் உடையுந்தானே. இதற்கு ஏன் கவலைப்படல் வேண்டும்'' என்று அறிவுரை வழங்கினுர். அந்த அடியாரின் பெட்டியில் ஒருபிடி மண்ணைக் கிள்ளிப் போட்டார்.

"மகனே, என் நிலையில் உனக்குத்தர ஒன்றும் இல்லை: இதுதான் என் நன்கொடை'' என்ருர்.அந்த அடியார் பின்னர் தனதானியம் பூமிச்சிறப்பு எல்லாம் பெற்று வாழ்ந்தார் என் பது செவிவழிவந்த கதை. அடியார் யார் என்பது தெரிய வில்லை. தெரிந்திருந்தால் நன்ருக இருந்திருக்கும்.

இந்தப் பின்னணியைப் பலர் விளங்குவதில்லை. "செல்லப்பாச் சாமியார் சமைப்பார். கொதிக் கும் போது பானையை உடைப்பார்.'' என எழுதிப்போ யினர். தவநிலையை, உயர்ந்த சிந்தனையை இந்த நிகழ்ச்சி விளக்குகின்றது.இவரைப்பற்றி இப்படிஎத்தனையோ கதைகள் இருப்பதாகக்கேள்வி. இவற்றை . வினவிப் பதித்து வைத் திருந்தால் நன்று. இதற்குச் சிவயோக சாமியார் நிறுவன த்தார் ஆவனசெய்ய வேண்டும். இப்படியான குறிப்புக்கள் ஆராய்ச்சிக்கு உதவும்.

சாமியாரின் ஞானபரம்பரையைப்பற்றி அறிய இவை உதவும். செல்லப்பாச் சாமியாரின் பரம்பரையில் வந்தவர் குடைச் சாமியார். இவர் சில காலங்களுக்கு முன்னர் அடங்கிவிட்டார். இது இவராற் கையாளப் படுகின்ற சொற்ருெடர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாடிச் சித்தர்

## 2. தேரை இழுப்பாய் பிள்ளாய்

யாழ்ப்பாணத்தில் தாடிச்சித்தர் என்ற பெயருடன் ஒருவர் இருந்தார். இவரைப்பற்றி எதுவும் தெரியவில்லை. இவரின் இயற் பெயர் பிறந்த ஊர் எதுவுமே தெரியாது. எல்லாத் தேர்த்திருவிழாவிலும் இவர் கலந்து கொள்வார். தேருக்குப் பின்னால் ஆனந்தக்கூத்தாடியபடியே வருவார். வாய்திறந்து அதிகம் பேசமாட்டார், பெயர் ஊரைக் கேட்டாற்சொல்லமாட்டார். நடுத்தரமான தோற்றம், மெலிந்த உடல், நீண்டதாடி, இதனாலேதான் இவருக்குத் தாடிச் சித்தர் என்ற பெயர் வந்தது. அரையிலே ஒருதுண்டு மட்டும் உடுத்திருப்பார். மேல்முழுவதும் திருநீறு அணிந்திருப்பார்.

"சாமி, பனிக் குளிர், இதோ ஒரு துண்டு'' என்றால் சிரிப்பார் "துண்டைப் போட்டால் திருநீற்றுப் பூச்சுத் தெரியாமல் மறைந்து போகும். செம்மறி ஆட்டிற்கு யாரடா கம்பளி கொடுத்தது'' என்பார். பசிக்கும் வேளைமட்டும் உணவு கேட்டுவாங்கி உண்பார். வேட்டி கிழிந்த நிலையில் இருந்தால் மட்டும் அவரின் சீடர்கள் யாராவது வேட்டி ஒன்றைக் கொடுத்தால் வாங்கி உடுத்துக் கொள்வார். குளிர், காற்று, மழை. பனி எல்லாவற்றையும் தாங்கக் கூடிய கடினமான உடல்.

ஒருமுறை இவரின்சீடர் ஒருவர் இவருக்கு வேட்டியொன்றைக் கொடுத்தார். உணவும் கொடுத்தார். இரண்டையும் அன்புடன் பெற்றுக்கொண்டார் தாடிச் சித்தர். இவருடைய பெயர் ஊரைக் கேட்க விரும்பினார் அந்தச் சீடர். அவர் நல்லவர்; பொருள் வளம் சற்று உடையவர்; ஊர் பேரைக் கேட்கவோ விடவோ என்று உள்ளம் கூசினார். கேட்கத் துணிவு வரவில்லை. இரவு நேரம் வந்தது. அந்த அடியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலைக் கொடுத்தார். இருகைகளாலும் தாடிச் சித்தர் வாங்கிக் குடித்துவிட்டுப் படுத்தார். சீடரும் நித்திரைக்குப் போய்விட்டார். மறுநாள் காலை அடியார் வெளியே வந்தார். வெளிச் சுவரில் எழுதப்பட்டிருந்தவை அவரின் ஆச்சரியத்தை வளர்த்தன. அது மேல் வருமாறு:

"பெயர் பித்தன் அடிமை.
ஊர் உலக வெளி"

இந்த வாசகங்களின் உட்பொருளை அந்தச் சீடர் உணர்ந்துவிட்டார். அதனை அப்படியே அழியாமல் பல காலம் வைத்திருந்தார். இது நடந்தது காங்கேசன்துறையில் என்பர்.

இந்தச் சீடருக்கு நோய் ஏற்பட்ட மறுநாளே சித்தர் தன் சீடர் வீட்டுக்கு வந்துவிட்டார். அந்தச் சீடரின் நெஞ்சிலே தன் தாடிபடும்படி இருந்தார். சித்தரின் பார்வையினால் சீடரின் நோய் மாயமாக மறைந்தது. தாடிச்சித்தர் கூத்தாடினார். "சிவ சிவ" என்று உச்சரித்தார்; மீண்டும் ஆடினார்; பாடினார். ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

"டேய் படுத்தது போதும் எழும்படா" என்றார். நோய் வாய்ப்பட்ட சீடர் எழுந்தார். தாடிச் சித்தர் நிலத்திலே விழுந்தார். நோயாளிச் சீடர் போல அனுங்கினார். துடிதுடித்தார். இப்படி ஒரு கணம் சென்றது திடீரெனத் தாடிச் சித்தர் எழுந்தார். இதன் உட்பொருளை மேல்வருமாறு விளக்கலாம்.

தன் சீடரின் துன்பத்தைக்கண்ட தாடிச்சித்தர் அன்பு கொண்டார். தன் அருட்பார்வை தாடி, ஆகியவை மூலம் நோயாளியின் நோயைத் தானே வாங்கிக் கொண்டார் வாங்கிய தாடிச் சித்தர் துடித்தார். அந்த நோய் பின்னர் அவர் மூலம் பூமியில் இறங்கிவிட்டது. இப்படியான விளக்கம் விஞ்ஞானிகளால் ஏற்கப்படுமோ? இது விளக்கத்திற்கு அப்பாற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க, தாடிச் சித்தர் மீண்டும் பாடினர்; ஆடினர். பாடல் மேல் வருமாறு:

''தேரை இழுப்பாய் பிள்ளாய்.
தேர் இருப்பு வரும் பிள்ளாய்''

இரண்டடியுடன் பாடல் நின்றுவிட்டது. சித்தர் அமைதியாக இருந்தார்.

''நல்லது சாமி. மாவை முருகன் தேரை இழுக்கின் றேன். பட்டுச்சாத்தி அருச்சனை செய்கின்றேன்'' என்றார்.

''அப்படியே'' என்று தாடிச் சித்தர் துள்ளிக் குதித்து ஓடிவிட்டார். தேர்த் திருவிழாவிற்குத் தாடிச்சித்தர் வந்தார் உரியமுறைப்படி சீடர் அருச்சனை எல்லாம் செய்தார். தாடிச் சித்தரும் அடியார் வீட்டில் உணவருந்திவிட்டுப் போனர்.

சில மாதங்கள் செல்ல அந்தச் சீடருக்கு நோய் வந்தது. படுத்த படுக்கையாகி விட்டார். சிலநாட் செல் லத் தாடிச்சித்தர் வந்தார். அவரைக்கண்டதும் அந்தச் சீடர் அழுதார்.

''டேய் இனி இந்தத் தாடி எதுவும் செய்ய இயலாது'' என்று சொல்லிவிட்டுத் தாடியை உருவினர்.

''சாமி நீங்கள் சொன்னபடி அருச்சனை செய்தேன். தேர் இருப்பு வரும்வரையும் இழுத்தேன். சாமி, என்னை மீண்டும் நோய் பிடித்து விட்டது. என்ன செய்யலாம்? மருந்து எது வும் நற்செய்யாதாம்'' எனக் கூறி அழுதார்.

''இனி மருந்து இதுதான்'' என்று சித்தர் தன்மேலில் இருந்த திருநீற்றைக் கையால் தடவி எடுத்தார். சீடரின் நெற்றியிலே பூசினர்.

''சாமி அடுத்த தேர் திருவிழாவிற்கு இருப்பேனே தெரி யாது. போன திருவிழாவில் எல்லாம் செய்தேன். கந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் கைவிட்டு விட்டான். என்னசாமி, நீங்கள் சொன்னபடி தேரை இழுத்தேன்'' இப்படிச் சொல்லவே சீடருக்கு மூச்சு வாங்கியது. தாடிச்சித்தர் சிரித்தார்.

''அப்பனே நான் அப்போதே சொல்லிவிட்டேன் நல்லாகக்கேள்'' என்றார்.

''நல்லது சாமி சொல்லுங்கள் கேட்கின்றேன்'' என்றார் சீடர்.

''தேரை இழும்பிள்ளாய். எம்பெருமான் முருகன் நேரிலே வீற்றிருந்து காட்சி தருகின்றான். உன் போன்ற முருகனடியார் தேர்வடத்தைத் தொட்டு முருகன் வீற்றிருக்கின்றதேரை இழுக்கவேண்டும். அப்போது நீ செய்தபாவம் யாவும் நீங்கும் என்பர். இது உனக்குத் தெரியாதோ? எமது உயிர் எமது உடலாகிய தேரிலே இருக்கின்றது. உடல் இயங்க உயிர் வேண்டும். உடலாகிய தேரை நீ இழுத்துக் கொண்டு வருகின்றாய். இப்போது உனக்கு இழைப்பு, முட்டு, மூச்சு ஆகவே நீ தேரைப் போல மூச்சு இழுக்கின்றாய். மண்ணிலே மறைந்து வாழ்கின்ற தேரையை நீ காணவில்லையா? தேரை போல உனக்கு மூச்சு இழுக்கும்; உன் உடலாகிய தேர் இருப்பிற்கு வரும். அதாவது நீ மறைந்துபோவாய். இதனைத்தான் நான் அன்று சொன்னேன்'' என்றார்.

''தேரை இழுப்பாய் பிள்ளாய்'' என்றது நீ தேரையைப் போல இழுப்பாய். அதாவது மூச்சு இழுப்பாய். மறு பொருள் தேர்—ஐ இழுப்பாய் அதாவது சுவாமி வலம் வருகின்ற தேரை வடம் பிடித்து இழுப்பாய். இதனைக் கேட்ட அந்தச் சீடர் தன் எஞ்சிய சில நாட்களைத் திருப்புகழ் படித்துக் கொண்டு கழித்தார்.

INTERACT CLUB
OF
MAHAJANA COLLEGE
TELLIPPALAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஆட விட்ட மைந்தனே! ஆடிறந்த துன்பமோ?

தாடிச் சித்தருக்கு ஆங்காங்கே சீடர் பலரும் இருந்தனர். அந்தச் சீடரில் ஒருவர் மிகவும் நல்லவர். தன் குருநாதருக்காக உயிரையும் கொடுப்பார். வேண்டிய உபசாரம் எல்லாம் செய்தார். ஆனால் அவரிடம் ஒரு பழக்கம் இருந்தது. மிருக பலி எனப்படும் வேள்வியில் அவர் கலந்து கொள்வார். பெரும் பொருள் செலவு செய்து நல்ல ஆட்டுக் கடாக்களை வளர்ப்பார். பிள்ளை போல வளர்த்த இந்தக் கடாக்களை வைரவர் கோவிலுக்குக் கொண்டு போவார். அங்கு அவை பலியிடப்படும். போட்டிக்காகக் கடா வளர்க்கின்ற காலம் அது. மிருக பலி நடப்பதற்கு முன்னர் பல நூற்றுக்கணக்காக கடாக்கள் கோயில் வாசலில் கட்டப்பட்டிருக்கும். யாருடைய கடா உயரம் பருமன் தோற்றம் என்பவற்றிற் சிறந்தது என்பதை இரசிகர்கள் தீர்மானிப்பர். "இவருடைய கடாதான் சிறந்தது" என்று ஒரு முகமாக எல்லோரும் பாராட்டினால் அந்தக் கடாக்காரருக்கு 'குதிரையில் ஏறிய மகிழ்ச்சி' இப்படியான பாராட்டை இந்தச் சீடர் பலமுறையும் அங்கே பெற்று வந்தார். கடா கொழுப்பதற்காகத் தவிடு, பிண்ணாக்கு, வெந்தயம், உழுந்து, குரக்கன், பலாக்காய், வாழைப்பிஞ்சு எல்லாம் கொடுக்கப்படும். ஆடு இந்த உணவை விரும்பி உண்ணாத போதெல்லாம் இரண்டு பேர் நின்று கடாவின் வாயைப் பிடித்து உணவை ஊட்டுவார்கள். இப்படிப் பலகாசு செலவு செய்து வளர்த்த கடாவைக் கோயிலுக்குக் கொண்டு போய்ப் பலியிடுவார்.

ஒரு நாள் காலை தாடிச்சித்தர் துள்ளிக் கொண்டு வீதி வழியாக வந்தார். தன் குரு வருவதைக் கூட, அவ்வழி வந்த அந்தச் சீடர் காணவில்லை. கவலை தோய்ந்த முகத்துடன் அந்தச் சீடர் நிலத்தைப் பார்த்து வண்ணம் வந்தார். இடையிடையில் வாய் முணுமுணுத்தது. "இந்த

INTERACT CLUB
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை என் மானம் போய்விட்டதே. இந்தக் கண் கெட்ட வைரவன் என்னைக் கைவிட்டு விட்டான் நான் இனி என்ன செய்யலாம்? எல்லாம் போச்சே'' எனப் புலம்பிக் கொண்டு வந்தார்.

தாடிச் சித்தர் திடீரெனத் துள்ளிக் குதித்தார். வழக்கம் போல ஆடினர்; பாடினர். தான் படுகின்ற துன்பத்தையும் பொருட்படுத்தாமல் சாமியார் இப்படி ஆடுகின்றார் பாடுகின்றார் என்பதையிட்டு அந்தச் சீடருக்குச் சற்று வருத்தம் ஏற்பட்டது. அதனை வெளிக்காட்டாமல் தாடிச் சித்தரை வணங்கினர் சீடர். தாடிச் சித்தரின் கூத்தும் கும்மாளமும் ஓயவில்லை. அது இன்னும் கூடிக் கொண்டே போனது. ஆட்டமும் பாட்டும் நின்றன. தாடிச் சித்தர் வாயைத் திறந்து பேசினர் "என்ன கவலே?'' எதற்கு யோசனை? என்ன வாட்டம்? எல்லாம் நன்மைக்கே சோராதே மகனே!'' என்றார்

"சாமி! எனக்கு வீட்டிலே பெரும் துன்பம் ஒன்று ஏற்பட்டுவிட்டது. ஐயோ சாமி! நான் என்ன செய்யலாம்?'' எனச் சீடர் அழுதார்.

"மனைவி, மக்கள், தாய், தகப்பன், மாமன், மாமி ஒருத்தருக்கும் ஒன்றும் ஏற்படவில்லையே'' என்றார் சித்தர் சற்றுக் கேலியாக.

'இல்லைச்சாமி, எனக்கு... ' என்ற சீடர் சொல்ல முடியாமல் தத்தளித்தார்.

மீண்டும் சித்தர் துள்ளிக் குதித்தார் சில நொடிகளாக. ஆட்டம் நின்றதும் சித்தர் பாடினர்.

"ஆடவிட்ட மைந்தனே!
ஆடிறந்த துன்பமோ?
ஆடவிட்டு நீயுமே
வாடிநிற்ப தேனடா?
ஆடவிட்ட காந்தனை
ஓடி ஓடித் தேடியே
பாடிப் பாடி நில்லடா''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டு நின்றது. சீடருக்கு அது ஒன்றும் விளங்கவில்லை. உள்ளத்துள் நினைத்தார்: "என்னுடைய கடா இறந்தது சாமிக்கு எப்படியோ தெரிய வந்துவிட்டது. இதனைத்தான் சொல்லுகின்றார். மிச்சம் விளங்கவில்லையே" எனச் சீடர் "தறு தறு" என அங்கும் இங்கும் பார்த்தார். அத்துடன் "என் கடா இறந்தது இரவு. இது எப்படிச் சாமியாருக்குத் தெரிந்தது" என நினைத்தும் அந்தச் சீடர் ஆச்சரியப்பட்டார்.

சித்தர் மீண்டும் பேசினார்—

"மகனே! கெடு குடி சொற் கேளாது. சாகுடி மருந்து குடியாது" நான் சொன்னேன். கேட்டாயோ? நல்லது. என் பாட்டு விளங்கவில்லையோ? சரி சொல்லுகிறேன் கேள். துன்பம் நேர்ந்தது உண்மை. இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது இயல்பு. துன்பம் மேலீட்டினால் உன் உள்ளத்தைத் தளம்பி ஆடவிட்ட மகனே! சொல்வேன் கேள். நீ போட்டிக்காக வளர்த்த ஆட்டுக் கடா இறந்து போய் விட்டதோ? இதுதானே உன் துன்பத்திற்குக் காரணம், உள்ளத்தை ஈடாடவிட்டு நீ ஏன் வாடி நிற்கின்றாய் மைந்தா? இந்த "மன ஈடாட்டம்" நல்லதில்லை. இதனைப் போக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. தில்லையம்பலத்திலே ஒரு பித்தன் இருக்கின்றான். அவன் பெயர் நடராசன். அவன் எம்போன்றவரைக் காப்பாற்ற ஒரு காலை எப்போதும் ஆடவிட்டுக் கொண்டுதான் நிற்பான். இவனைச் சுடலையாடி என்றும் சொல்வர். ஓடி ஓடி வேலை செய்து. குழை, தவிடு, பிண்ணாக்கு எல்லாம் தேடிக் கடா வளர்த்தாயே? இது இறந்து போய்விட்டது. என்ன செய்யலாம்? உள்ளத்தை ஈடாடவிடாதே. காலை ஆடவிட்டுக்கொண்டு நிற்கின்ற நடராசப் பெருமானை ஓடி ஓடித் தேடு. அவரை நினைத்துப் பாடு. அவர் பெரியவர். கடா இறந்ததும் நல்லது. ஏன்? உயிர்க் கொலை ஒன்றைச் செய்த பாவத்திலிருந்து நீ தப்பினாய்" என்றார்.

"சாமி பலி தராவிட்டால் வைரவர் கோபிப்பார். அவர் என் குல தெய்வம்" என்றார் சீடர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை வைரவர் கோபம் கொள்ளமாட்டார். சிவத்துள் பிள்ளையார், கந்தசாமியார், வைரவர், வீரபத்திரர் எல்லோரும் அடங்குவர். சிவனை நினை" என்றார் சித்தர்.

"நல்லது சாமி. நான் என்ன செய்ய?" என்றார் சீடர்.

"நேரே வா! கீரிமலைக்குப் போவோம். தீர்த்தமாடுவோம்; நகுலேசரைக் கும்பிடுவோம்" என்றார் சித்தர்.

இருவரும் போய்த் தீர்த்தமாடினர். சிவனை வணங்கினர். அன்று தொடக்கம் புலால் உண்பதையும் வேள்விசெய்வதையும் கைவிட்டார் அந்தச் சீடர்.

## ஊமைச் சித்தர்

## 4. கீரை தின்றால் கிறுதி வரும்

யாழ்ப்பாணத்திலே வேறும் ஒரு சித்தர் இருந்தார். இவர் திருமணமானவர். குழந்தைகளும் இருந்தன. அதிகம் பேசமாட்டார். இதனால் இவரை 'ஊமையர்' எனவும் அழைப்பர். இவர் குடும்பப் பொறுப்பை அதிகம் ஏற்று நடக்க மாட்டார். தோட்டம் செய்து வந்தார். ஆனால் தோட்டத்திற்கு ஒழுங்காக நீர்இறைக்கமாட்டார். பயிர்களை வாட விடுவார். இருந்தாற் போல, தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயிலுக்கு ஓடி விடுவார். இரண்டு மூன்று தினங்களுக்கு அங்கே தங்கி விடுவார். திடீரென வீடு நோக்கி ஓடி வருவார். வந்ததும் இவர் மனைவி உள்ளம் ஒடிந்து பேசுவாள்.

"கிழட்டுப் பிள்ளைக்கு வீட்டு எண்ணம் வந்துவிட்டதோ? ஏன் அங்கே சந்நிதியில் கிடப்பதுதானே" என அலுத்துக் கொள்வார் மனைவியார். இருந்தும் தன் கணவன் மீது அன்பு வைத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இங்கே பார். கோபப்படாதே தாயே! முருகன் கூப்பிட்டான் இந்தக் கட்டையை. இந்தக் கட்டை ஓடிப் போனது. இவ்வளவுதான்'' என்பார்.

மனைவி ஒன்றுமே பேசவில்லை.

ஒருமுறை இந்தச் சித்தர் பத்து நாள் வரை சந்நிதியில் நின்றுவிட்டார், பின்னர் வீட்டு நினைவு வர ஓடோடி வந்து விட்டார். வந்ததும் தன் மனைவியைப் பார்த்துப் பேசினார்;

'ஆய்ச்சி, எனக்குப் பசி!'' என்றார்.

''சமையல் முடிந்துவிட்டது சாப்பிடலாம்'' என்றார் மனைவி.

''நல்லது. கறி என்ன?'' என்றார் சித்தர்.

''பாரப்பா! நான் என்ன செய்யலாம்? தோட்டம் தேடுவாரில்லாமல் கிடக்கிறது. வரும்படி இல்லை. அங்காலே அக்காத்தை வீட்டிலே ஒருபடி அரிசி வாங்கிச் சமைத்தேன். பிள்ளைகள் கஞ்சியைக் குடித்தார்கள். விளையாடப் போய் விட்டார்கள். நான் இன்னும் கஞ்சி கூடக் குடிக்கவில்லை. வேலை அதிகம்'' என அலுத்துக் கொண்டார்.

''கறி என்ன?'' என்று வினவினார் சித்தர்.

''கீரைக்கறி'' என்றார் மனைவி.

''நல்லது'' என்றார் சித்தர்.

''கீரைத் தண்டுக் குழம்பு'' என்றார் மனைவி. கோபத்தால் குரல் கிர் கிர் என்று இருந்தது.

''நல்லது'' என்றார் சித்தர்.

''அப்புறம் கீரை இலைச் சொதி'' என்றாள் மனைவி. இந்த முறை குரலில் 'கிர் கிர்' என்ற கரகரப்புக் கூடியது.

''நல்லது, சோற்றை உன் கையாலே போட்டுத்தா. கீரை என்றாலும் உன் கையாலே தந்தால் அமிர்தமாக இருக்கும்'' என்றார் சித்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மருட்ட வந்து விட்டார் மாப்பிள்ளை மருட்ட" என்ற மனைவி இலையிலே சோற்றைப் படைத்தார். உணவை உண்டபடியே சித்தர் பாடினார்.

"அப்பா! இங்கே பார். ஒன்றில் சாப்பிட வேண்டும். இல்லாவிட்டால் பாட வேண்டும்" என்றார் மனைவி.

"நல்லது. இந்தப் பாட்டைக்கேள்" சித்தர் பாடினார். பாடல் இதோ!

"கீரை கீரை என்கிறீர்
கீரை தின்ற மாந்தர் எல்லாம்
கிறுதி வந்து சாகிறார்
கீரை என்று நீயுமே
கிறுங்கி நிற்ப தேனடி"

பாடல் முடிந்தது.

"இது எனக்கு விளங்காது" என்றாள் மனைவி.

"நல்லது. சொல்கிறேன். என்னைப் பார்த்துக் கீரை கீரை என்கிறாய். கீரைக் கறி, கீரைச் சொதி என்றாய். கீரை அதிகம் தின்றால் பித்தம் தலைக்கு ஏறும். பின்னர் கிறுதி வரும். கிறுதி வந்தால் சாவும் வரும். இப்படி நீ கோபப்படப் படாது. என்னைக் கண்டதும் 'கிர் கிர்' என்ற குரலிலே பேசி (கிர்-3) நீ கோபப்படப்படாது. இப்படியான கிர்ப் பேச்சினைப் பேசியவர் ஆணவம் என்னும் கிறுதி மேலீட்டினால் இறந்துவிடுவார். ஆகவே நீ அளவிற்கு மிஞ்சிக் 'கிர் கிர்' என்று பேசி ஆணவத்திற்கு இடம் கொடாதே" என்று தன் மனைவிக்குப் புத்திமதி சொன்னார்.

## குடைச் சித்தர்

### 5. போனது வருமடா! வந்தது போமடா! சொந்தம் ஏதடா?

குடைச் சாமியாரின் சீடர் ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். யாழ் குடா நாட்டிற்கு வெளியே வசித்தவர் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகிவிட்டார். இருந்த போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடைச்சாமியைப்பற்றி அந்த நோயாளி நினைந்து நினைந்து வணங்கிக் கொண்டிருந்தார். இதனை எப்படியோ தன் ஒப்பற்ற அகப்பார்வையினால் அறிந்து விட்டார் குடைச்சாமி யார். உடனே தன் சீடர் ஒருவரிடம் விரைந்து சென்றார்.

"தம்பி, எடு உன் காரை. கொஞ்சம் யாழ்ப்பாணத் திற்கு வெளியே போக வேண்டும்" என்றார்.

"சாமி! என் மோட்டார் வண்டி புத்தம் புதியது. அது கொழும்பு, கண்டி, காலி எங்கும் போய்வரக் கூடிய நிலையில் இருக்கின்றது. சாமியை ஏற்றிப் போனால் எந்தத் தொல்லையும் வராது. ஆனால் சாமி......"

"சரி பெற்ரோலுக்குக் காசு இல்லை அதுதானே" என்றார் சாமியார்.

"ஓம் ஓம், சாமி வாறேன். அக்கம் பக்கத்திலே மாறலாம். மாறிக் கொண்டு வருகிறேன்" என்றார் அந்த அன்பர் பணிவுடன்.

தன் தாடியை உருவியபடி குடைச்சாமியார் மிகவும் மிருதுவாகப் பேசினார். "தம்பி,நான் செல்வதைக்கேள். காசு மாற வேண்டாம். அந்தத் தேவை இப்போது வராது" என்றார்.

"ஏதோ சாமி சொன்னால் சரி தான்" என்றார் அந்த அன்பர். சாமியார் தொடர்ந்து பாட்டாகவே பேசினார்.

"தம்பி! நான் சொல்வதைக்கேள். நன்று கேள். விளங்கிக்கொள்". சாமியார் பாடினார்—

"போனது வருமடா!
வந்தது போமடா!
சொந்தம் ஏதடா?"

பாட்டிற்கு விளக்கம் கொடுத்தார்: "தம்பி, இந்தப் பரந்த உலகத்திலே பிறந்தோம். வாழ்கின்றோம் பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்கப் போகின்றோம். இடையிலே காசு, பணம், காணி பூமி, பொன், வெள்ளி தேடித் தேடிக் குவிக்கின்றோம். நிலையில்லாத இந்தப் பொருள் போகும். வரவும் செலவும் எல்லாம் வந்தது திரும்பிப் போகும். வரவு செலவு எல்லாம் ஒன்றுதான். இறுதியாக இந்த நில உலக வாழ்க்கையை விட்டு மறைகின்றோம். அந்த நிலையிலே எமக்குச் சொந்தம் ஏது தம்பி. எமது குதிக்காலில் பித்த வெடிப்பு ஏற்படுகின்றது. அந்த வெடிப்பிலே, கீழ்ப்பாதத்திலே ஒட்டிய மண்கூட அங்காலே மறு உலகம் வந்து சேருமோ? சேராது. இதுதான் உலகம். இதனை நாம் படிப்படியாக உணர வேண்டும்'' இப்படிப் போதனை நடந்து கொண்டிருந்தது.

அந்த நேரம் ஒருவர் விரைந்து வந்தார் அந்த இடத்திற்கு. சாமியாரைக் கண்டதும் சற்றுத் தயங்கினார்.

''பயப்படாமல் பேசலாம்'' என்றார் சாமியார். வந்தவர் பேசத் தொடங்கினார்- ''சாமி! நான் இவரிடம் கைக்கடனாக இரண்டு வருடங்களுக்கு முன் இரண்டாயிரம் ரூபாய் வாங்கினேன். வியாபாரத்தில் நட்டப்பட்டுப் போனேன். வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. இவரும் பலதடவை கேட்டுவிட்டு, போன காசு போகட்டும் என்று இருந்துவிட்டார். இப்போது எனக்கு வியாபாரத்திலே நல்ல இலாபம் கிட்டிவிட்டது. ஆகவே என் மன்னிப்பைத் தெரிவித்துவிட்டுப் பட்ட கடனைத் திருப்பிக் கொடுக்க வந்துள்ளேன். இவர் எனக்கு மிகவும் வேண்டியவர்; வட்டி வாங்க மாட்டார். வட்டி கேட்டாலும் கொடுக்க நான் தயார்'' என்று தன் பேச்சை முடித்தார். முடித்துவிட்டு அப்படியே பணத்தைத் தன் பெட்டியிலிருந்து எடுத்துக் கொடுத்தார். தன் நண்பரிடம். பின்னர் சாமியாரைப் பார்த்துப் பேசினார்.

''சாமி உங்களுக்கும் என் காணிக்கையாக ஏதாவது'' என்றார்.

INTERACT CLUB
OF
MAHAJANA COLLEGE
TELLIPPALAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வேண்டாம் இவர் என்னைக் கவனிப்பார். நன்கு கவனிப்பார். ஒரு குறையும் வைக்க மாட்டார். இருந்தும், உங்களன்பை மதிக்கின்றேன். உங்கள் கையால் ஒரு ரூபாய் மட்டும் தந்தால் போதும்'' என்றார் சாமியார்.

மரியாதையாக ஒரு ரூபாவை எடுத்துக் கொடுத்து விட்டுப் போய் விட்டார்.

குடைச்சாமியார் தன் அன்பரைப் பார்த்தார். அந்த அன்பருக்கு கண் கலங்கி விட்டது. சாமியார் மீண்டும் பாடினார்.

''போனது வருமடா
வந்தது போமடா
சொந்தம் ஏதடா''

''பொருள் பண்டம் மாத்திரம் வந்து போகும் என்று நினைக்காதே. இன்ப துன்பங்களும் அப்படியேதான். போனது வரும். வந்தது போகும். சொந்தம் எதுவும் இல்லை''. பின்னர் சாமியாரும் அன்பரும் புறப்பட்டனர் மோட்டார் வண்டியில்.

## 6. தாடியனைப் பிடிக்காதே நாடியே சிவத்தைக்காண்

குடைச்சாமியாருக்கு வேறு ஓர் அன்பர் இருந்தார். நல்ல சுகதேகியாக இருந்த அவருக்குத் தொய்வு நோய் திடீரெனப் பிடித்துக் கொண்டது. ஆங்கில வைத்தியம் செய்து பார்த்தார்; ஆயுள்வேத வைத்தியம் செய்து பார்த்தார். நோய் சற்றும் தணியவில்லை. அந்த அன்பர் ஒரு நாள் குடைச் சாமியாரைத் தேடிப் போனார். தேடிப் போய்த் தன் துன்பத்தை எடுத்துரைத்தார். இத்தனையையும் பொறுமையுடன் சாமியார் கேட்டுக் கொண்டிருந்தார். கேட்டுவிட்டு உபதேசம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாடியனைப் பிடிக்காதே
நாடியே சிவத்தைக்காண்"

எனச் சுருக்கமாக மறுமொழி சொன்னார்.

"தம்பி, நான் கிழவன். பாவம் எதுவும் செய்ய மாட்டேன். எமக்குமேலே சிவம் என்று ஒரு பொருள் உண்டு. நீ ஓடிவந்து இந்தத் தாடிக் கிழவனைப் பிடிக்காதே. உன்னுள் இருக்கின்ற சிவத்தை நாடிக்காண் தேடிக்காண்" என்றார்.

"நல்லது சாமி; அப்படியே செய்வோம். எனக்கு வழி காட்டுங்கள்" என்றார் அன்பர்.

"சரி, விடு உன் காரை. இரண்டு பேருமாகக் கீரிமலைக்குச் சென்று தீர்த்தமாடுவோம். பின்னர் நகுலேசப் பெருமானை வணங்குவோம்". என்றார் சாமியார்.

"சாமி, எனக்கு வெயில் ஒத்துக்கொள்ளாது. கீரிமலை உப்புத் தண்ணீரும் ஒத்துவராது" என்றார் அந்த அன்பர்.

"பார்த்தாயோ, பார்த்தாயோ உன் சிவநம்பிக்கையை. வா போவோம்" என்றார் சாமியார். இருவரும் போய் நீராடிச் சிவனை வணங்கினர். வணங்கியதும் சாமியார் மீண்டும் பேசினார்.

"தம்பி, இது கன்மநோய். முழுமையாக மாறாது. ஏதோ ஒரு வகையாக இதனைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கலாம்" என்றார்.

## 7. அஞ்சடா தம்பி நீ பஞ்சமாபாதகத்தை

ஒரு நாள் குடைச் சாமியாருக்குக் கடும்பசி எடுத்துவிட்டது. கீரிமலை சடையம்மா சமாதியில் அவர் மூன்று நாளாக ஒரே கிடையாகக் கிடந்து தியானத்தில் ஈடுபட்டிருந்தார். கடும் பசி வந்ததும் தன் அன்பர் ஒருவர் வீட்டிற்குப் போனார். போய் "அம்மா பசி" என்றார். அந்த வீட்டிலே அப்போது இளைஞன் ஒருவன்தான் இருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். அவன் தாய் தந்தையர் மரணச் சடங்கு ஒன்றிலே கலந்து கொள்ளச் சென்று விட்டனர். வீட்டிலே உணவு எதுவுமே இல்லை. இளைஞன் பதைபதைத்தான்.

"சாமி, உணவு இல்லையே. பக்கத்திலே ஒன்றுவிட்ட தமையனார் வீடு இருக்கின்றது. அங்கே நல்ல சோறு கறி இருக்கும் எந்த நேரமும். இப்படி இருங்கள் சாமி. இதோ வாங்கிக் கொண்டு வந்துவிடுவேன்" என்றான் இளைஞன்.

"தம்பி, வேண்டாம் பொறு" என்றார் சாமியார். இளைஞன் சற்றுத் திடுக்கிட்டுப் போனான். சாமியார் பசியுடன் போய் விடுவாரோ என்ற பயம் எழுந்தது. சாமியார் மீண்டும் பேசினார்.

"அஞ்சடா தம்பி நீ
பஞ்சமாபாதகத்தை"

என்றுவிட்டுச் சிறிது நேரம் பேசாமல் இருந்தார். "தம்பி அந்த வீட்டிலே மதுவருந்தும் பழக்கம் இருக்கின்றது. மேலும் அவர்கள் எந்த நாளும் புலால் உணவையே அருந்துவார்கள். பூரணையும் சரி அமாவாசையும் சரி. நீ பயப்படாதே. உன் தாயார் தன் கையாலே புழுக்கொடியல் மாவை இடித்து வைத்திருக்கின்றார். அவர் புண்ணியவதி. அவர் கைப்பட்ட உணவு புனிதமானது. எனக்கு இரண்டு உருண்டை புழுக்கொடியல் மாவை உன் கையால் தேங்காய், சர்க்கரை போட்டுக் குழைத்துத் தா. அடுப்பிலே கொதிநீர் இருக்கின்றது. கோப்பியும் போட்டுத் தா!" என்றார். இதனைக் கேட்ட அந்த இளைஞன் அதிர்ச்சியடைந்து போனான். பக்கத்து வீட்டு ஆசாரக் குறைவு எப்படிச் சாமிக்குத் தெரியும்? சரி அதுபற்றி அவர் அறிந்திருக்கலாம். எமது வீட்டிலே புழுக்கொடியல் மா இருப்பது சாமிக்கு எப்படித் தெரியும்?" இப்படி அவன் யோசித்தான். சாமியாருக்கு உரிய தவ வலிமையை, ஞானப் பார்வையை அவன் அறிவான். அப்படியே எல்லாப் பணிவிடையையும் செய்து சாமியாரைப் பசியாற வைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி! பஞ்சமாபாதகம் நிகழும் வீட்டிலே உள்ள உணவு அறுசுவை மிக்கதாக இருக்கலாம். அதனை உண்பது பாவம். அதனை வாங்கி எனக்கு நீர் தருவதும் பாவம். அதனாலே தான் உம்மைக் கொண்டு வேலை செய்வித்தேன். குறை நினையாதீர். எனக்குக் களைப்பாக இருக்கின்றது. பட்டணம் போகப் போகின்றேன். எனக்கு ஒரு ரூபா தாரும். இறயிலிலே போகப் போகின்றேன்" என்றார்.

உடனே அந்த இளைஞன் இரண்டு ரூபாவை எடுத்துக் கொண்டு வந்து மிகவும் மரியாதையாகக் கொடுத்தான்.

"தம்பி ஒரு ரூபா போதும். நீர் மற்றதை வைத்திருக்கவும். என்னைப் போன்றவர் தேவைக்கு ஏற்றபடி பணம் வைத்திருக்க வேண்டும். தேவைக்கு மிஞ்சினால் அது நஞ்சு" என்றார்.

"சாமி! உங்களுக்குப் புதுக் குடை ஒன்று வாங்கித் தரவோ?" என்றான் இளைஞன். எந்த நேரமும் குடையைக் கையில் வைத்திருப்பதால் அவருக்குக் குடைச் சாமியார் என்ற பெயர் வந்தது.

"இல்லைத்தம்பி! இந்தக் குடை இன்னும் சிலகாலம் உழைக்கும். தேவை என்றால் வந்து கேட்பேன்," என்றார் சாமியார். சொல்லிவிட்டு இளைஞனை ஆசீர்வதித்துவிட்டுப் போய்விட்டார். சாமியாரின் தவ வலிமையை நினைத்து மெச்சினான் இளைஞன். தன் தாய் தந்தையர் வந்ததும் இந்த நிகழ்ச்சியைச் சொல்லி மகிழ்ந்தான்.

## கூச்சாமியார்

### 8. கூக்கூ என்கிறது அக்குயில்
### கூக்கூ என்பான் இப்பயல்

கூச்சாமியார் என்று ஒருவர் வந்து போவார். எல்லாத் திருவிழாக்களிலும் கலந்து கொள்வார். சரியாக அரை மணித்தியாலத்திற்கு ஒருமுறை 'கூக்கூ' என்று குயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலக் கத்துவார். அரையிலே சிறு துண்டு ஒன்றைக் கட்டியிருப்பார். பார்த்தால் விசரன் போல் இருப்பார். இவர் 'கூ' சத்தம் போடுவதைப் பெரியவர்களும் சிறுவர் களும் சிலவேளை வேடிக்கை பார்த்துச் சிரிப்பார்கள். அவரும் சேர்ந்து இவர்களுடன் பலமாகச் சிரிப்பார் குரலோ வெண்கலக் குரல். உடலோ வலிமையானது. ஒருநாள் ஒருவர் வீட்டில் இருந்து சாமியார் உணவருந்தினர். உணவருந்தும் போதும் 'க்கூக்கூ' என்று கூவினர். எல்லோரும் 'கொல்' என்று சிரித்தனர். வீட்டுக்காரர் இதனைப் பொருட்படுத்தவில்லை. உணவருந்தியதும் சாமி யாரைப் பார்த்து,

''சாமி! ஏன் கூச் சத்தம் போடுகிறீர்கள்? எமக்கு இதனைச் சொல்லுங்கள்'' என்றார்,

''விளங்கக் கூடியவர்களுக்குத்தான் சொல்ல வேண்டும், விளங்காதவர் என்னை விசரன் பைத்தியகாரன் என்று செல்வர். நல்லது சொல்கின்றேன்,'' கண்ணை மூடிய சாமியார் மீண்டும் ''க்கூக்கூ'' என்றார். பின்னர் தனக்கே உரித்தான வெண்கலக் குரலில் பாடினர்.

''கூக்கூ என்கிறது அக்குயில்
கூக்கூ என்பான் இப்பயல்
கூக்கூவைப் பாடினன்

நாக்கு நல்ல மணிவாசகன்
நாக்குத் தடிக்கவே கூக்கூ
எனக் கத்துவான் இப்பயல்''

இதனைக்கேட்ட அந்த அன்பர் மெய்சிலிர்த்துப் போனார். எதுவும் பேசவில்லை. இப்பாடலின் விளக்கம் மேல்வருமாறு:

''கடவுள் படைப்புப் பல. அதில் குயிலும் ஒன்று. வசந்த காலத்தில் வரும் இந்தக் குயில் 'கூகூ' என்று கூவும். அதன் இனிமை ஒப்பற்றது. குயிலின் குரலிலும் சிவத்தின் ஒலியைக் கேட்பார் மெய்யடியார். கூச்சாமியார் ஆகிய நான் என்னையே குயிலாகப் பாவித்துக் கொள்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளிகைக்கு ஒருமுறை எம்பெருமானை நினைத்துக் குயில் போலக் கத்துவேன். இதுதான் இப்பயலின் வழிபாடு. அன்ெருரு நாள் மணிவாசகப் பெருமான் குயிலைப் பார்த்துப் பாடினூர். அவரின் நாக்குத் தூய்மையானது, ஆன படியால் அவர் குயிலைப் பார்த்து மேல் வருமாறு பாடினூர். அதனையே நாம் இன்று குயிற்பத்து என்போம். அதன் முதற் பாடல் அருமையானது, அற்புதமானது.''

'கீதம் இனிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்' என்ற முதலடியைக் கொண்டது அப்பாடல். ஆகவே தன்னையே குயிலாகப் பாவித்துக் கொண்ட கூச்சாமியார் தன் நாக்குத் தடிக்கும் வரை எம் பெருமானைக் 'கூகூ' என்று கத்தி வணங்குவார். சிவத்தைப் பாடிப் பாடி அவரின் நாக்குத் தடிக்கும். நாத்திகம் பேசி நாக்கு ஒருவருக்குத் தடிக்கலாம். கடவுள் இல்லை என வாதிடுவது நாத்திகம். இதுபற்றி மணிவாசகரே பாடியுள்ளார். சிவனையே நம்பி கூச்சாமியார் 'க்கூக்கூ' எனக் கூவிச் சிவனை வழிபட்டார். இதனை உணராதவர் 'கூச்சாமியார்! விசர்ச் சாமியார். பைத்தியகாரச் சாமியார்' என எண்ணி எள்ளிநகையாடினர்.

இந்தக் கூச்சாமியாரைப் பற்றிப் பல கதைகள் உண்டு அவற்றுள் முக்கியமான வேறுஒன்றையும் இங்கு நோக்கலாம். இந்தக் கூச்சாமியாரின் அன்பர் ஒருவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். வழுக்கி விழுந்து அவரின் கை முறிந்துபோய் இருந்தது. அதற்கு அவர் பற்று மருந்து போட்டிருந்தார். கூச்சாமியார் திடீரெனப் போனூர் அங்கு.

''டேய் எனக்குப் பசி'' என்ருர்.

'சாமி எந்தக் கையால் உங்களுக்கு உணவு தருவது? என் கைகள்தானே முறுந்து போய்விட்டன. எலும்பு பொருந்தப் பல நாட்கள் செல்லும் என்கின்ருர் வைத்தியர்'' எனக் கூறி அழுதார் அந்த நபர். கூச்சாமியார் வழமைபோலக் கூறினூர். பின்னர் பாடினூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துன்பம் முடியும்
இன்பம் வரும்
இன்பம் முடியும்
துன்பம் வரும்"

எனப் பாடிய பின்னர் பேசாமலிருந்தார். பின்னர் சிறிது சிறிதாகப் பேசினுர். "மகனே! இந்த உலகமே நிலையில்லாதது. சிவம்தான் நிலையானது. இன்பமும் துன்பமும் ஒன்று தான். துன்பம் ஒருபோதும் நீடிக்காது. துன்பம் முடியும். இன்பம் பிறக்கும். இன்பம் போகக் துன்பம் வரும். இன்ப துன்பம் நீடிப்பதில்லை. இன்பமாக இப்போது இருப்பது பின்னர் துன்பத்தைத் தரும். துன்பமாக இருப்பது பின்னர் இன்பத்தைத் தரும். ஆதலால் கலங்காதே. சிவம் தான் எல்லோருக்கும் இறுதி இலக்கு" எனக் கூறினுர். பின்னர் பாடினுர்.

"இலக்கை அடைவாய்
கலக்கம் வேண்டாம்"

பாடல் முடிந்தது. "உனக்குரிய இலக்குச் சிவம். அதனை நீ அடைவாய்; கலங்கிப் பதருதே" என்ருர்.

உணவை வாங்கி உண்ட பின்னர் கூச்சாமியார் போய் விட்டார். அந்த அன்பரின் எலும்பு மிகவும் இலகுவாகப் பொருந்திவிட்டது. சாமியார் கூறியதை அவர் நினைத்தார். வருத்தம் மாறியது.

"இன்பம் முடியும்
துன்பம் வரும்"

எனச் சாமியார் என்னைப் பார்த்துக் கூறியதன் காரணம் என்னவாக இருக்கலாம் எனத் தன்னுள் நினைத்தார். பத்து நாட்கள் சென்றன. அவரின் மகள் ஒரு நாள் காதலனுடன் ஓடிவிட்டாள். இது அவருக்குப் பிடிக்கவில்லை. மிகவும் துன்பப்பட்டார். மேலும் பத்து நாள் செல்ல அவரின் மகளும் மருமகனும் அவர் முன்பாக வந்தனர். வந்து நிலத்தில் விழுந்து வணங்கினர். அவர்களை அந்த அன்பர் இலகுவில் மன்னித்துவிட்டார். கூச்சாமியாரின் அற்புத வாக்கை எண்ணினுர். எண்ணி உள்ளம் தேறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பாச் சாமியார்

## 9. வீட்டு நாயும் காட்டு நாயும்

சதுமலைச் செல்லப்பாச் சாமியார் மாவிட்டபுரத்தில் திருமணம் செய்தவர். சிறந்த முருகனடியார். தன் வாழ்நாள் முழுவதையும் தன் குடும்பத்தைக் கவனிப்பதிலும் முருகனுக்குத் தொண்டு செய்வதிலும் கழித்துவந்தார். தன் ஆயுட் காலத்தின் இறுதி நாட்கள் முழுவதையும் முருக வழிபாட்டிலே கழித்துப் பேரின்பம் கண்டவர். இல்லறத்தில் நின்று துறவறத்தைக் கடைப்பிடித்தவர்.

இவர் ஒரு நாள் பிற ஊர் சென்றிருந்தார். கோயில் வழிபாட்டை முடித்ததும் தன்நண்பன் ஒருவனிடம் சென்றிருந்தார். நல்வழிபாட்டை முடித்தவருக்குப் பசி எடுத்தது. கால் நடையாகவே எங்கும் செல்வார். காசைக் கையாலே தொடுவது மிக மிகக் குறைவு. ஆகவே நண்பன் வீட்டிலே பசி ஆறுவது அவரின் நோக்கம். ஆசாரக் குறைவானவர்கள் வீட்டிலே தங்கவும்மாட்டார். அப்படியான இடங்களில் உணவை வாங்கி உண்ணவும்மாட்டார். அவர் சென்ற நண்பன் வீட்டிலே கடிநாய் ஒன்று நின்றது. அதனை வழமையாகப் பகல் நேரங்களிலே கட்டிவைப்பார்கள். அன்று காலையில் நாயைக் கட்டிவைக்கப் பணியாளன் மறந்துவிட்டான். குரைக்காமல் வந்த அந்த நாய் சாமியாரின் காலைக் கௌவிவிட்டது. அந்த நண்பன் சாமியாரின் சீடனும் கூட.

''ஐயோ, சாமி, இந்த நாய் இப்படிச் செய்துவிட்டதே'' என்று நண்பன் அழாக் குறையாகச் சொன்னான். பின்னர் நாயை அடிக்கத் தடி எடுத்தான்.

''வேண்டாம் மகனே, நாயை அடிக்காதே,'' என்றார் சாமியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பன், பின்னர் தன்பணியாளனைக் கூப்பிட்டுத் தாறு மாருக ஏசத் தொடங்கினுன்.

''வேண்டாம் மகனே, பாவம் அந்த ஏழையை ஏசாதே'' என்ருர்.

''சாமி, மருந்து கட்டவோ?'' என்ருன் நண்பன்.

''வேண்டாம் மகனே'' என்ருர் சாமியார். சாமியாரின் பொறுமையைக் கண்ட நண்பன் செய்வது இன்னது என்று தெரியாது தவித்தான். ஈற்றிலே கண்கள் கலங்கிவிட்டன. அழுதேவிட்டான் அந்தச் சீடன்.

''மகனே, சொல்வதைக்கேள். ஒரு பாட்டுப் பாடட்டோ?'' என்ருர் சாமியார்.

''இந்தப் பாட்டு இந்த நேரம் எதற்கு? உங்களுக்குக் கடிகாயம் வேறு'' என்ருன் சீடன்.

''மகனே கடியும் மிடியும். இந்த நேரம் பாட்டுப்பாட உவப்பான நேரம். நீ ''ஓம்'' என்ருல் பாட்டுப் பாடுவேன்'' என்ருர் சாமியார்.

''சாமியாரின் வாயாலே பாட்டுப்பாட, அதனை நான் கேட்க என்ன தவம் செய்தேனே தெரியாது,'' என்ருன் சீடன்.

தனக்குரிய கணீர் என்ற குரலிலே சாமியார் பாடினர். பாடல் இதோ.

''நாய் கடித்ததென்றுமே
நலிந்து நிற்பதெனடா
நாய் கடித்ததேனடா
இந்தக் (தன்நெஞ்சைத் தொட்டு)
காட்டு நாயும் தானுமே
வேட்டை குட்டி மூன்றையும்
கூட்டி வந்த தேனடா?
வீட்டு நாயும் விரைந்துமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டு நாயைக் கடித்ததே
வீட்டு நாயின் உணவையே
காட்டு நாயும் குட்டியும்
போட்டுப் பிடிக்க லாமோ?''

பாடல் முடிந்ததும் சாமியார் சிரித்தார்.

''மகனே, பொருள் விளங்குகின்றதா?'' என்ருர். ''பாதி விளங்கவில்லை'' என்ருன் சீடன்.

''சரி, நல்லது சொல்வேன் கேள். என்னை உன் நாய் கடித்து விட்டது என்று நீ ஏன் துன்பப்படுகின்ருய். நாய் ஏன் கடித்தது என்று கேள்வியைக் கேட்டுப்பார். நான் காட்டு நாய்; காடு மேடு என்று திரிபவன். நானும் ஒரு வகையில் நாய்தானே? இல்லையோ? காட்டு நாயாகிய நான் வேட்டை நாய்க் குட்டி மூன்றை வளர்க்கின்றேன். அந்த நாய்க்குட்டிகள் என்னுடன் வந்தன'' என்ருர்.

இதனைக் கேட்ட அந்தச் சீடன் விளங்காமல் அங்கு மிங்கும் பார்த்தான்.

''சாமி, நாய்க்குட்டிகளைக் காணவில்லையே' என்ருன் சீடன் வியப்புடன்.

''நல்லது சொல்வேன் கேள். நான் கொண்டுவந்த நாய்க்குட்டிகளை இலகுவிலே காண முடியாது. நன்கு தேடினுல்தான் தெரியும். அந்தக் குட்டிகள் இந்த நெஞ்சாம் கூட்டிலே வாழுகின்றன. அவை ஆணவம், கன்மம், மாயை. நான் எனக்குப் பசி என்று வந்தேன். ஆகவே உங்கள் வீட்டுநாய் விரைந்து என்னைக் கடித்தது. அந்த நாயின் உணவை வாங்கி உண்ணவே இந்த நாய் வந்தது. அந்த நாயிலே தான் பிழை இல்லை. இந்த நாயிலேதான் பிழை.'' கடகடவென்று சாமியார் சிரித்தார். சீடன் காலில் விழுந்து சாமியாரை வணங்கினுன். பின்னர் உள்ளே சாமியாரை அழைத்துச் சென்று திருவமுது வழங்கினுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரட்டைச் சாமியார்

## 10. மதம் வந்து விட்டால் மதம் போய் விடும்

சிரட்டைச் சாமியார் என்று ஒருவர் இருந்தார். இவர் திருவோடு வைத்துப் பிச்சை எடுப்பதில்லை, பெரிய சிரட்டை ஒன்றைச் செருகி வைத்திருப்பார். இதிலேதான் பிச்சை எடுப்பார். பசி வந்த நேரம், நல்லவர்கள் வீட்டிலே சென்று பிச்சை கேட்பார்.

"ஒரு சிரட்டைச் சோறு" என்பார். அதனை வாங்கி உண்பார். "சாமி மேலும் ஒரு சிரட்டைச் சோறு போடவோ?" என்றால் "போதும்" என்பார். உடனே ஒரு பாடலைப் பாடுவார்.

"அதிகம் உண்டால்
மதம் வந்துவிடும்
மதம் வந்துவிட்டால்
மதம் போய்விடும்" என்பார்.

"நிறைய உணவை உண்டால் உடல் கொழுத்துவிடும். உடல் கொழுத்துவிட்டால் யானைக்கு மதம் பிடிப்பது போல எனக்கும் மதம் வந்துவிடும். ஆணவம் மேலிடும். ஆணவ மதம் வந்துவிட்டால் மதம் எனப்படுகின்ற சமய உணர்வு என்னை விட்டு ஓடிவிடும்" என்று விளக்கம் கொடுப்பார்.

இவருக்கு அன்புடன் உணவு வழங்கும் அன்பர் ஒருவர் இருந்தார். ஒரு சிரட்டைச் சோற்றைக் கொடுத்துவிட்டு "சாமி காசு தரலாமோ" என்று அந்த அடியவர் கேட்பார்.

"இல்லை! அடுத்த முறை தா" என்பார் சிரட்டைச் சாமியார். இப்படியே நாட்கள் பல போயின. சிரட்டைச் சாமியாரும் வந்து போவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சீடர் திருமணமானவர். ஆனால் ஆண் குழந்தைப் பாக்கியம் இல்லை என்று சோதிடர் பலர் கூறிவிட்டனர். இந்தப் பலனை உண்மைப்படுத்துவது போல இந்தச் சீடருக்கு ஒன்றன்பின் ஒன்றாக மூன்று பெண் குழந்தைகள் பிறந்தன. இதனால் இந்தச் சீடர் உள்ளம் உடைந்திருந்தார்;

"கொள்ளி வைக்கப் பிள்ளை இல்லையே" என்று கலங்குவார்.

பல நாட்களுக்குப் பின்னர் சிரட்டைச் சாமியார் வந்தார்.

வழக்கம் போல, "ஒரு சிரட்டைச் சோறு" என்றார். சோற்றை உண்டபின் பேசினார்.

"எடடா! உன் காசை" என்றார் சாமியார்.

"நல்லது சாமி" என்றார் சீடர்.

"மீசையான் வருவான். ஆசை நிறைவேறும்" என்ற சாமியார் காசை வாங்கிவிட்டு, நில்லாமல் ஓடினார். சீடருக்கு விளங்கவில்லை.

"சாமி விளங்கவில்லையே!" என்றார்.

"அகமுடையாளைக் கேள்" என்ற சாமியார் தொடர்ந்து ஓடினார்.

சீடரின் அகமுடையாள் வெட்கத்துடன் வந்து நின்றாள்

"இந்த மாதம் நான் இன்னும் தலை முழுகவில்லை" என்றாள்.

உரிய நேரத்தில் நற்சுகத்துடன் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. மீசையான் எனச் சாமியார் குறிப்பிட்டது ஆண் குழந்தையை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலுச் சாமியார்

## 11. காகம் கரையும் நீயும் கரைவாய்

வேலுச் சாமியார் என்று ஒருவர் இருந்தார். இவரின் இயற்பெயர் வேலுப்பிள்ளை என்பர். எப்போதும் கையிலே வெள்ளி வேல் ஒன்றை வைத்திருப்பார். இருந்து இருந்து விட்டு,

"வேல் வேல் முருகா
வெற்றி வேல் முருகா"

எனப் பாடுவார். இதனால் இவருக்கு வேலுச்சாமி என்ற பெயர் வந்தது என்பாரும் உளர். ஒரு நேரம் மட்டுமே உண்பார். எந்த வீட்டிலும் மூன்று நாளுக்கு மேல் தங்க மாட்டார். எதையும் நன்கொடையாகப் பெறமாட்டார். தேவையாயிருந்தால் மட்டுமே கேட்டு வாங்குவார் தன் அன்பரிடம்.

"எனக்கு வேட்டி ஒன்று தா; சால்வை ஒன்று தா; காசு தா" என்பார். அவருக்குத் தேவையில்லாத நேரம் எதைக் கொடுத்தாலும் வாங்கிக் கொள்ள மாட்டார்.

"உலகப் பொருளை வாங்கிக் குவிக்கின்ற ஆசை வந்து விட்டால் எல்லாம் மோசமாகிவிடும்" என்பார்.

"ஆசை மோசம் செய்யும்
காசு கொடிய விடம்"
"மண் ஆசை மாலைத் தரும்"

இப்படிச் சிறிய கூற்றுகளைக் கூறித் தன் அன்பர்களுக்கு நல்லுரை வழங்குவார். பார்த்தால் பிச்சைக்காரன்போலக் காட்சி தருவார்.

இவரைப் பிச்சைக்காரர் என நினைத்துப் பிச்சை கொடுக்க முன்வருபவர் பலரும் உண்டு. அப்படி யாராவது சில்லறைக் காசை நீட்டினால் வேலுச் சாமியார் சிரிப்பார். தன்னை அஃறிணையில் வைத்துப் பேசுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதற்குத் தேவை அருட் பிச்சை. பொருட் பிச்சை இல்லை. அந்தப் பிச்சாண்டியிடம்தான் நான் பிச்சை கேட்கின்றேன். பிள்ளாய்! உங்கள் பொருளை உங்களோடு வைத்துக்கொள்ளவும்'' என்பார் சிரித்தபடி. இது விளங்கா விட்டால் விளங்க வைப்பார். அவர் பிச்சாண்டி எனக் குறிப்பிடுவது வேறு யாரையும் இல்லை. பிச்சாண்டி என்பவர் சிவபெருமான்.

இந்த வேலுச் சாமியாரை மெய்யன்போடு வழிபட்டார் ஓர் அன்பர். அவரிடம் சாமியார் கேட்டுக் கேட்டுக் காசு, உணவு, வேட்டி எல்லாம் வாங்குவார். ஒருநாள் சாமியார், "பிள்ளாய் எனக்குக் கடும்பசி. நிறையச் சோறு போடு'' என்றார். அவ்வண்ணமே அந்த அன்பர் செய்தார். உடனே சாமியார் வாழை இலையையும் சோற்றையும் எடுத்துக் கொண்டு போய் வெளியிலே நிலத்தில் வைத்தார். "கா; கா!'' எனக் காகங்களைக் கூப்பிட்டார். காகங்கள் வந்து குவிந்திருந்து உணவை உண்டன. எந்தக் காகமும் வேலுச் சாமியாரின் கிட்ட வந்து இருந்து உணவை உண்ணும் என்பது குறிப்பிடத்தக்கது. அகத்தூய்மை உடையவரிடம் காகம் கரவு கொள்ளதில்லை என்பது ஐதீகம்.

"சாமி! பசி என்றீர்கள். இப்போது உணவைக் காகங்களுக்கு வைத்து விட்டீர்கள். உங்களுக்கு உணவில்லையே! உணவு போட்டு வரட்டுமோ?'' என்றார் அன்பர்.

"எல்லாம் உனக்காக மகனே, சொல்லட்டுமோ?'' என்றார் சாமியார்.

"ஓம்! நல்லது,'' என்றார் அன்பர்.

"காகம் கரையும்
நீயும் கரைவாய்
தாயைக் கும்பிடு''

என்ற சாமியார் தொடர்ந்து பேசினார். 'மகனே காகம் பசி வந்தால்கரையும். கா கா என்று கத்தும். உனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவகை நோய் வரப் போகின்றது. சனி பகவான் குறையினால் நோய் ஏற்படும். ஆகவே நீ தந்த உணவைக் காகத்திற்குக் கொடுத்தேன். காகம் சனியின் வாகனம். நோய் ஏற்பட்டால் நீயும் கரைவாய். அதாவது உன் உடல் கரைந்து போய்விடும். நீ மெலிவாய். இதற்கு மருந்து இல்லை. ஆகவே நீ உலக மாதாவாகிய தாயைக் கும்பிடு; அம்பிகையின் அருளை நாடு,'' என்று சொல்லிவிட்டுச் சாமியார் போய்விட்டார். அவர் சொன்னபடி நடந்தது. அந்த அன்பர் அதன் பின்னர் நீண்ட காலம் வாழவில்லை;

## 12. வெளியே காவி ஆடை
## உள்ளே காசு வாடை

வேலுச்சாமியார் தங்கியிருக்கும் இடத்திற்கு பலரும் வருவார்கள். இவர்களுடன் நன்கு உரையாடுவார். சாமியார் சிலருடன் பேசமாட்டார்; நிலத்தைப் பார்த்தபடியே இருப்பார். சிலருடன் கோபப்பட்டுப் பேசுவார்; தன்னைக் காண்பவரிடம் உள்ளகுறைகளை அப்படியேசொல்லிவிடுவார்.

வேலுச் சாமியாரைப் பார்க்க ஒருவர் வந்திருந்தார்; அவர் வெள்ளிக்கிழமை கோயிலுக்குப் போய்விட்டு வந்தார். வெள்ளை வேட்டிக்குமேல் காவிப்பட்டு ஒன்றைக் கட்டியிருந்தார். அது விலையுயர்ந்தபட்டு. இவர் சாமியார் இருந்த இடத்திலே கற்பூரம் கொளுத்தி நிலத்திலே விழுந்து வணங்கினர். பின்னர் கற்றை கற்றையாக காசுத் தாள்களை எடுத்துக் காணிக்கையாக வைத்தார். காசையும் ஆளையும் வேலுச் சாமியார் மாறிமாறிப் பார்த்தார். பின்னர் ஒன்றும் பேசாமல் நிலத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தார். இந்த மௌனம் பத்து நிமிடம் வரை நீடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமியார் காசைக் கையால் தொடவும் இல்லை. காசு அப்படியே நிலத்திலிருந்தது. மௌனம் கலைந்தது. சாமியார் காறினர். காசு இருந்த பக்கமாகக் காறித் துப்பினர். பின்னரும் தொண்டையைத் தடவிக் கொண்டு இருந்தார். ''வெற்றி வேல் முருகா! நஞ்சு வேண்டாம் முருகா'' என்று விட்டு மீண்டும் மௌனத்தில் ஆழ்ந்தார். இரண்டு நிமிடங்கள் வரை சென்றன. தன் வெண்கலக் குரலில் பாடினர்.

''வெளியிலே காவி ஆடை!
உள்ளே காசுவாடை!
தள்ளியே நீ போடா!''

காசைக் கொண்டு போனவருக்கு எல்லாம் விளங்கி விட்டது. தன் இளமையில் நேர்மையற்ற வழிகளைக் கையாண்டு அவர் பணம் சேர்த்தவர். முதுமையில் காவிச் சால்வையை அணிந்து கோயிலுக்குச் செல்வார். காவியின் தூய்மை அவருக்கு விளங்காது. எந்த நேரமும் பொருள் பற்றியே சிந்தித்துக் கொள்வார். உள்ளத்திலே காசு மணம் வீசிக் கொண்டிருந்தது. ஆனபடியால் சாமியார்-''தள்ளியே நீ போடா!'' என்று வந்தவரைக் கண்டித்தார். அங்கு நின்றவர்களின் கோரிக்கைப்படி காசை எடுத்துக் கொண்டு வந்தவர் போய்விட்டார்.

## சாதுதங்கம்மை

## 13. புல்லும் ஆவது நீரே

இவர் என் பெரியதாயார். இல்லற வாழ்வை விட்டு இளமையில் இவர் துறவியானர். அருளம்பலச் சாமியாரைத் தன் குருவாக ஏற்ருர். தவ வாழ்க்கையில் தன் நாளைக் கழித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதுதங்கம்மை ஒருநாள் தோட்டத்தினூடாக நடந்து போனார். நானும் அவர் பின்னர் சென்றேன். வரம்பிலே உள்ள புல்லை யார் பிடுங்குவது என்பது பற்றி உறவினராகிய மச்சான்மார் இருவருக்குச் சண்டை மூண்டது; ஒருவர் கையிலே உழவாரம். மற்றவர் கையிலே புல்லுச் சத்தகம். இவர்களைப் பார்த்ததும் சாதுதங்கம்மைக்குச் சிரிப்பு வந்தது. சாதுவைக் கண்டதும் சண்டையிடும் மச்சான்மார் அமைதியாக, அடக்கமாக நின்றனர். தங்கம்மை தனக்குரிய இனிய குரலிலே பாட்டை இசைத்துப் பாடினார்.

"புல்லுக்காகவே
மல்லுக் கட்டும் மட்டிகாள்
நல்ல சொற்கேளிர்
புல்லறி வாளரே
புல்லும் ஆவதும் நீரே!"

பின்னர் இதற்கு விளக்கம் தந்தார்.

"புல்லுக்காக மச்சானும் மச்சானுமாகிய, நீங்கள் மல்லுக் கட்டிச் சண்டை போடலாமோ? இது சரியோ? இது முறையோ? இப்படிச் சண்டை செய்யும் நீங்கள் உண்மையில் மடையர். உங்களுக்கு நான் நல்லது சொல்லுவேன். அதனைக் கேளுங்கள். நல்ல புத்தி இல்லாத மடையர்களே! நீங்கள் இப்படிச் சண்டை போட்டு ஒருவரை ஒருவர் தாக்கலாம். தாக்கினால் இருவரும் இறக்கலாம். இப்படி இறக்க நேரிட்டால் இருவரும் அடுத்த பிறவியிலே புல்லாகத்தான் பிறப்பீர்கள். ஆகவே, வரம்புப் புல் வரம்பிலே நிற்கட்டும். இருவரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்" என்றார். இந்த அறிவுரையைக் கேட்ட இருவரும் வீடு போயினர். சண்டை முடிந்தது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. நஞ்சிலும் நஞ்சடா

சாதுதங்கம்மைக்கு வர்த்தகர் ஒருவர் அன்பளிப்பாக ஏதாவது பணம் கொடுத்துத் தரிசித்துச் செல்ல வந்தார் அவரைப் பார்த்துச் சாது, ''நாளைக் காலை இதே நேரம் வா'' எனப் பணித்தார். அந்த வர்த்தகர் போய்விட்டார். சாதுதங்கம்மை மறுநாள் எழுந்து, பெரிய கறையான் புற்றுப் பகுதியில் ஓர் இடத்தைச் சுத்தமாக்கி விட்டு அதிலே படுத்திருந்தார். அந்த வர்த்தகர் குறிப்பிட்ட நேரம் வந்து விட்டார். வந்தவர் சாதுதங்கம்மையைப் பார்த்து விட்டு "அம்மா! இப்படி ஏன் கறையான் புற்றடியிலே படுத்துவிட்டீர்கள்? புற்றிலே நாகம் போன்ற கொடிய பாம்புகள் இருக்கும். கடித்துப் போடும்'' என்றார். உடனே சாதுதங்கம்மை பாட்டாகவே அறிவுரை வழங்கினார்.

நெஞ்சிலே வஞ்சம் ஏன்
அஞ்சடா கடவுளை நீ
நஞ்சிலே கொடியது நாகம்
பிஞ்சிலே பழுத்த மாந்தர்
நஞ்சிலும் நஞ்சடா!''

பின்னர் விளக்கவுரை வழங்கினார்— 'நெஞ்சிலே நீ வஞ்சம் நிறைய வைத்திருக்கின்றாய். ஏன் இந்தக் கெட்ட வழி உனக்கு? இதனைக் கைவிடு. நீ கடவுளுக்கு பயந்து நட. கடவுளை நம்பு. அவர் உன்னைக் கைவிடார். சிறு வயதிலே முறை கெட்டு நடந்தவர், பிஞ்சிலே வெம்பிப் பழுத்த பழம் போன்றவர். நஞ்சிலே கொடியது நாக பாம்பு. ஆனால் பிஞ்சிலே பழுத்தவர் கொடிய நஞ்சுடைய நாகத்திலும் கொடிய நஞ்சுடையவர். இளமையில் நீ முறை கெட்டுக் கள்ள வியாபாரம் செய்தாய். கெட்ட வழியில் பொருள் தேடிய உன் காணிக்கை எனக்கு வேண்டாம். தயவு செய்து போய்விடு. பாம்பு என்னைக் கடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பிலும் பார்க்கக் கொடியவன் நீ. உன்னைக் கண்டு நான் அஞ்சுகிறேன். எனப் பேசி முடித்தார். வெட்கத்துடன் அந்த வர்த்தகர் போய்விட்டார்.

கொடுக்கல் வாங்கல் காரணமாக இருவருக்குப் பிணக்கு ஏற்பட்டது. இந்தப் பிணக்கை உறவினர் அயலவரால் தீர்க்க முடியவில்லை. ஆகவே சண்டைப்படுபவர்களைப் பார்த்து "நீங்கள் இருவரும் சாதுதங்கம்மையிடம் செல் லுங்கள். அவர் சொல்லுவதைக் கேட்டு நடவுங்கள்" என்றனர். இருவரும் அப்படியே சாதுவிடம் வந்தனர்; இவர்களின் பிணக்கை ஏற்கெனவே தன் அகக் கண்ணிலே கண்ட சாது புத்திமதி சொன்னார்:

நாளும் பொய் சொன்னால்
கூழும் கிடையாது பதரே!
ஊழ்வினை விடாது மட்டி
பாழ்பட்ட கோணங்கி
வாழ்வை விடுவாய் விடுவாய்''

பின்னர் ஒருவரைப்பார்த்து விளக்கம் கொடுத்தார்.

''ஒவ்வொரு நாளும் பொய் சொன்னால் பொய் சொல்லுகின்ற உன் வாய்க்குக் கூழும் கிடையாது. நெல் லுள் இருக்கின்ற பதர் போன்றவன் நீ! அதாவது சப்பி'' என்றார் சாது. பின்னர் மற்றவரைப் பார்த்துப் பேசினார். "இந்தப் பிறவியில் நீ பொய் சொல்லித் தப்பிக்கொள்ளலாம் என நினைக்காதே. உன்னை ஊழ்வினை விடாது மடையா. அவ்வினை ஏழு பிறவியும் தொடர்ந்து வரும். உன் பாழ்பட்ட கோணங்கி வாழ்வை விடுவாய் இன்று தொடக்கம் விடுவாய்'' எனப் பேச்சை முடித்தார்.

பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த இருவரும் ஆச்சரி யத்தில் ஆழ்ந்து போயினர். இந்தத் தகராறிலே ஈடுபட் டிருந்த இருவரும் மோசக்காரர்கள். ஒருவர் நெல் மொத்த வியாபாரி. நெல்லிலே சப்பியைக் கலந்து விற்பவர். ஆகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைப் பார்த்துச் சாதுதங்கம்மை "பதரே" என்றார் மற்றவர் நெல் சில்லறை வியாபாரி: மொத்த வியாபாரியிடம் இரண்டு வண்டி நெல்லை வாங்கி விற்றார். பின்னர் பணத்தைத் தருவதாகச் சொன்னார். சொன்னவர் பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை. பொய்ச் சத்தியம் செய்து பணத்தைக் கொடுத்து விட்டதாகச் சொல்லத் திட்டமிட்டிருந்தார்: அதனாலே தான் சாதுதங்கம்மை "ஊழ்வினை விடாது மட்டி! பாழ்பட்ட கோணங்கி வாழ்வை விடுவாய்" எனப் புத்திமதி கூறினார்: இருவரும் வெட்கத்துடன் திரும்பிப்போயினர்.

இப்படியாக ஈழத்தின் பலபாகத்திலும் வாழ்ந்த சித்தர் பலரும் அறிவுரைகளை, நல்லுரைகளை வழங்கினர். வழங்கிச் சமுதாயத்தை நல்வழிப்படுத்தினர். சமுதாயத்தோடு ஒட்டி வாழ்ந்த இச்சித்தர் பரம்பரையினர் சமுதாயத்தின் முன்னோடிகள்; வழிகாட்டிகள்; இவர்களின் நல்வாழ்வும் சீரிய உரைகளும் மக்களை நல்வழிப்படுத்தின. செவிவழி வந்த சிலவற்றை மட்டும் இங்கு தெளிவு படுத்தினேன். இன்னும் இப்படியான நிகழ்ச்சிகளைத் தெரிந்த, நேரில் கேட்ட பெரியோர் பலரும் எம்மத்தியில் வாழ்கின்றனர். அவர்களும் தங்களுக்குத் தெரிந்தவற்றைப் பதிந்து வைத்தால் அவை எதிர்காலத்தவருக்குப் பயன்படும்.

# யோகர் சாமி

## 15. கற்றது ஆங்கிலம் பற்றுவது தமிழ்

இந்தத் தொடர்ச்சியை முடிக்க முன்னர் ஒரு நிகழ்ச்சியை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். யோகர் சுவாமிகள் என் தகப்பனாரின் நண்பன். அந்த முறையில் என்னைச் சுவாமிகளுக்குத் தெரியும். அவரைத் தேடிப் போய் நான் வணங்குவதில்லை. காணும் இடங்களில்

மிகவும் அடக்கமாக மரியாதையாக நான் நடந்து கொள்வேன். படித்துப் பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற பின்னர் தினகரன் ஏட்டிலே மூன்று ஆண்டுகள் வரை பணி புரிந்தேன். இந்தக் காலத்தில் ஒரு நாள் யோகர் அடிகளார் என்னைப் புத்தகக் கடை ஒன்றிலே கண்டுவிட்டார். புத்தக அலுமாரியைத் திறந்துவிட்டுப் புத்தகங்களைப் பார்வையிட்டேன். சுவாமிகள் என்னை நோக்கி வருவது கண்ணாடி மூலம் தெரிந்தது. என்னருகே வந்தார்.

''கற்றது ஆங்கிலம்
பற்றுவது தமிழ்''

என்றார். நான் எதுவும் பேசவில்லை. ''கேட்டதோ'' என்றார் மீண்டும்-

''ஓம் சாமி'' என்றேன்-

''விளங்கியதோ?'' என்றார் சாமியார்.

''ஓம் சாமி'' என்றேன்.

''எங்கே விளங்கப் படுத்து பார்க்கலாம்'' என்றார்.

''நல்லது சாமி, நான் ஆங்கிலத்திலே தான் கற்றுப் பட்டம் பெற்றேன். தமிழை ஒருபாடமாகவும் பல்கலைக் கழகத்தில் படித்தேன். வீட்டிலும் தமிழ் படித்துள்ளேன். இப்போது தினகரன் ஏட்டிலே தமிழிலே எழுதி, அதனையே தொழிலாகக் கொண்டுள்ளேன். அங்கு நான் உதவி ஆசிரியராகப் பணிபுரிகின்றேன். அதனைத்தான் சாமியார் குறிப்பிடுகிறார் என்பது என் விளக்கம்'' என்றேன்.

''நல்லது. ஆனால் நீ அங்கே கனகாலம் நிற்க மாட்டாய். தமிழைப் படி. தமிழிலே பேசு. தமிழிலே நிறைய எழுது. நீ கட்டாயம் எழுதுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுவது நற்பணி
தொழுவதும் நற்பணி'' என்றார்;

''நல்லது சாமி'' என்றேன்.

''நான் சொன்னது பொதுவாக இக்காலத்தில் உள்ள ஆங்கிலம் கற்ற எல்லோருக்கும் பொருந்தும். குறிப்பாக உனக்குப் பொருந்தும். கற்றது ஆங்கிலம்— பற்றுவது தமிழ்'' தமிழை இறுகப் பிடித்துக்கொள். தமிழைப் பிடித்தால் முருகனையும் சேர்த்துப் பிடித்துக் கொள்ளலாம். எழுது. நிறைய எழுது. எழுத்திலே வெற்றி காண்பாய். எழுத்திலே இன்பம் பிறக்கும். சரி போய் வருகிறேன்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார். இது நிகழ்ந்தது 1953 ஆம் ஆண்டிலே. இன்று நிகழ்ந்ததைத் திரும்பிப் பார்க்கின்றேன். தினகரனை விட்டு விலகினேன். எழுத்துலகில் புகுந்தேன். என் எழுத்துலக வேலைகளையும் சாமியார் சொன்னதையும் யோசித்துப் பார்க்கின்றேன். எனக்கு மட்டுமன்றி இன்று எல்லோருக்கும் அவர் பொன்வாக்குப் பொருந்தும்.

''கற்றது ஆங்கிலம்
பற்றுவது தமிழ்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நூலாசிரியர் எழுதிய நூல்கள்

நாடகம்:

வாழ்வு பெற்ற வல்லி

*இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது*

பூதத்தம்பி

இறுதிமூச்சு

கலை:

கலையும் மரபும்

இசையும் மரபும்

யாழ்ப்பாணத்து இசைவேளாளர்

மக்கள் கலை:

மாவை முருகன் காவடிப் பாட்டு

மாருதப்புரவல்லி கப்பற் பாட்டு

குருநாதர் மான்மியம்

காகப்பிள்ளையார் மான்மியம்

வெற்றிலை மான்மியம்

வன்னி நாய்ச்சிமார் மான்மியம்

கன்னணி அம்மன் கஞ்சி வார்ப்புத் தண்டற் பாட்டு

குருவிச்சி நாய்ச்சி சலிப்பு

சைவமதம்:

யாழ்ப்பாணத்து வீரசைவர்

சிவனே போற்றி குகனே போற்றி

ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து

நவீனம்:

மீனாட்சி

வாழ்க்கை வரலாறு:

கலையருவி கணபதிப்பிள்ளை

*இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது*

கலை மகிழ்நன்

பேராசிரியர் வித்தியானந்தனின் வாழ்க்கைப் பணி

---

அம்பிகா அச்சகம், குரும்பசிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org